செ.வெ.எண்.01 நாள்:01.05.2017

# திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம் பூலம் ஊராட்சி மூன்றடைப்பு பகுதியில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையாளராக பங்கேற்றார்கள்.

---

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம் பூலம் ஊராட்சி மூன்றடைப்பு பகுதியில் இன்று (01.05.2017) கிராமசபை கூட்டம் நடைபெற்றது. பூலம் கிராமத்தில் முதியவர் திரு.சிதம்பரம்பிள்ளை தலைமையில் கிராமசபை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையாளராக கலந்து கொண்டார்கள் மற்றும் நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.எச்.வசந்தகுமார் கலந்து கெண்டார்கள்.

இக்கூட்டத்தில் கிராம ஊராட்சியில் செயல்படுத்தப்பட்டுள்ள புதிய குடிநீர் திட்டம், குளங்கள் அழப்படுத்துதல், கிராம சாலைகள் திட்டம், தனிநபர் கழிப்பிடம் கட்டுதல், குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல், ஊரக வேலைவாய்ப்பு திட்டம், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துதல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திட்ட அறிக்கை, பொது நிதி செலவினம் உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

ஊராட்சிகளில் நடைபெறும் வளர்ச்சி திட்டங்களை ஆய்வு செய்திடவும் புதியதாக செயல்படும் திட்டங்கள் குறித்த கருத்துகளை பொதுமக்கள் தெரிவிப்பது குறித்தும் கிராமசபை கூட்டம் நடத்தப்படுகிறது. இக்கூட்டங்களில் ஊருக்கு தேவையானவை தெரிவிக்க வேண்டும். குடிநீரை மோட்டர் மற்றும் முறையற்ற இணைப்புகள் மூலம் பெறாமல் அனைவருக்கும் குடிநீர் பெரும் வகையில் உபயோகித்தல் வேண்டும். திறந்தவெளியில் மலம் கழிப்பதால் சுகாதார கேடுகள் ஏற்படுகிறது. எனவே அனைத்து வீடுகளிலும் தனிநபர் கழிப்பிடங்களை அமைத்து அவைகளை பயன்படுத்திட வேண்டும். குடிநீர் சிக்கனமாக உபயோகிக்க வேண்டும். மேலும் ஊரக பகுதிகளில் கொசுகள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்துதல் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அரசின் திட்டங்களை பொதுமக்கள் முழுமையானளவில் பயன்படுத்தி பயன்பெருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பல்வேறு புகார் மனுக்களை கிராமமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். கிராமசபை கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, வேளாண்மை துறை இணை இயக்குநர் திரு.கனகராஜ், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு. கல்யாணசுந்தரம், மகளிர் திட்டம் அலுவலர் திருமதி.எப்சி ரீமா ரிட்டா, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்

(வேளாண்மை) திருமதி.சாந்திராணி, நாங்குநேரி வட்டாட்சியர் திரு.ஆதிநாராயணன், நாங்குநேரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பிச்சுமணி, திருமதி.கருணாவதி ஊராட்சி செயலர் திரு.பிரேம்குமார் மற்றும் அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.